## கலைஞரின் நினைவுபோற்றி

# கழகத்தின் வெற்றிக்கு உறுதியேற்போம்!

### ‘உங்களில் ஒருவன்’ கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

எதிர்க்கட்சியாக உள்ள அ.தி.மு.க.வோ அடங்கி ஒடுங்கி பா.ஜ.க.வுக்கு அடிமைச் சேவகம் செய்து கொண்டிருக்கிறது.

“வீரன் சாவதே இல்லை, கோழை வாழ்வதே இல்லை “என்றார் தலைவர் கலைஞர். கழகத்தினர் களத்தில் வீரர்களாக நிற்கிறார்கள். தமிழைக் காக்கவும் தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்கவும் திராவிட முன்னேற்றக் கழகம் என்றென்றும் முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் உறுதியுடனும் தெளிவுடனும் தன் போராட்டத்தை முன்னெடுக்கும். தமிழ் மக்களின் வளமான வாழ்வுக்கான திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தும்.

எப்போதும் மக்களுடன் நிற்கின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் தலைவர் கலைஞர் கட்டிக் காத்த இயக்கம். அவர் இல்லை என்று எண்ணாமல், என்றென்றும் அவர் நினைவுகளில் வாழ்கின்ற கோடிக்கணக்கான உடன்பிறப்புகளில் உங்களில் ஒருவனான நானும் இருக்கிறேன். ஆகஸ்ட் 7 அன்று நம் உயிர்நிகர் தலைவரின் நினைவு நாளில் தமிழர் வாழும் நிலமெங்கும் அவர் நினைவைப் போற்றுவோம்.

**வங்கக் கடற்கரையில் தன் அண்ணனுடன் நிரந்தர ஓய்வு கொண்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடம் நோக்கி ஆகஸ்ட் 7 அன்று நடைபெறும் அமைதிப் பேரணியில் உடன்பிறப்புகள் கடலெனத் திரண்டு வணக்கத்தைச் செலுத்துவோம். மாவட்டங்கள்தோறும் அமைக்கப்பட்டுள்ள தலைவர் கலைஞரின் திருவுருவச் சிலைகளுக்கு அந்தந்த மாவட்டக் கழக நிர்வாகிகள் – உடன்பிறப்புகள் மாலையிட்டு மரியாதை செலுத்திட வேண்டும். கிளைகள்தோறும் தலைவர் கலைஞரின் நினைவு போற்றப்பட வேண்டும். இந்நிகழ்வுகளில் கழக நிர்வாகிகள் காலை 7 மணியளவில் பங்கேற்றிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.**

வீடுகளிலும் வீதிகளிலும் தமிழ் காத்த போராளியாம் முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப் படங்களுக்கு, மலர்தூவி வணக்கம் செலுத்துங்கள். தலைவர் கலைஞரின் நினைவுகளை நெஞ்சிலேந்தி, கொள்கைவழிப் பயணத்தைத் தொடர்ந்து, 2026 சட்டமன்றத் தேர்தலில் 7-ஆவது முறையாகக் கழக ஆட்சி அமைந்திட உறுதியேற்போம். ஓரணியில் தமிழ்நாடு எனும் மகத்தான முன்னெடுப்பில் மக்களை ஒருங்கிணைத்துக் களத்தில் வெல்வோம்!தலைவர் கலைஞர் புகழ் ஓங்குக! திராவிட முன்னேற்றக் கழகம் வெல்க!

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056

ஆடி 18

03-08-2025.

## உடல் உறுப்புக் கொடையில்

# தமிழ்நாடு முதன்மை மாநிலமாகி இருப்பது கூடுதல் சிறப்பு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 4-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

உயிர் பிரிந்த பின் தமது உடற்பாகங்கள் தீக்கும் மண்ணுக்கும் இரையாகாமல், பிறரது வாழ்வுக்குத் துணையாவதே பெருவாழ்வு!

அதனால்தான், துணை முதலமைச்சராக இருந்தபோது, எனது உடலுறுப்புகளைக் கொடையளித்தேன்; முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின், உடலுறுப்புகளைக் கொடையளிப்போருக்கு அரசு மரியாதையுடன் விடை கொடுக்கப்படும் என்று அறிவித்தேன்.

2023 செப்டம்பர் 23இல் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது முதல், இதுவரையில் 479 பேர் (கடந்த ஆண்டு மட்டும் 268 பேர்) தங்களது உடலுறுப்புகளை ஈந்து, பல நூறு உயிர்களை வாழ வைத்திருக்கிறார்கள்! அவர்களுக்கு எனது வணக்கம்!

உடலுறுப்புக் கொடையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகி இருப்பது கூடுதல் சிறப்பு!

இவ்வாறு முதல்வர் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாக தென்கிழக்கு மூலையில், செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும், புதுக்கோட்டை மன்னர் இராஜகோபால தொண்டைமான் அவர்களின் அருங்காட்சியகத்துடன் கூடிய நினைவு மணிமண்டபத்தின் கட்டுமான பணியினை, அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா, தலைமையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன் புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பா.ஜெயசுதா, செயற் பொறியாளர் (பொ.ப.து.) (கட்டட (ம) கட்டுமானப் பராமரிப்பு) ரவிச்சந்திரன், மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருமதி.க.பிரேமலதா, உதவி செயற்பொறியாளர் கணேஷன், உதவிப் பொறியாளர் ரமேஷ்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## சேலம் மத்திய மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் அமைதி பேரணி!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், ஆக.4-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



தமிழினத்தலைவர், முத்தமிழறிஞர், உலக தமிழர்களின்நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் ஆகஸ்டு7ஆம் தேதி வியாழக்கிழமை. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வழிநின்று கழகம் வளர்த்து, ஒட்டு மொத்த தமிழ் சமுதாயத்தையும்தலைநிமிரச் செய்த தலைவரின் நினைவு நாள் ஆகஸ்டு7.

தமிழ்கூறும்நல்லுலகில் வாழும் உள்ளங்களுக்குஉவகையூட்டும் ஒரு மந்திரச் சொல் கலைஞர்.96 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தாலும் தமிழ் என்ற ஒரு சொல் இருக்கும் வரை வாழும் உயிரோட்டமுள்ள ஒரு சொல் கலைஞர்.

தமிழாக, தகவமைக்கும் கதிராகதிகழந்தும், நமக்கு நல் ஒளியாகவும், நயமான வழியாகவும் இருந்தவர் முத்தமிழறிஞர்தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள். “இருந்தவர்’ என்று சொல்வதை விடவும் இப்போதும், எப்போதும் “இருக்கிறார்” என்பதே பொருத்தமானதாக இருக்கும், நம் எண்ணங்களில் இருந்து நொடிப்பொழுதும் விலகாதவர் நம் தலைவர்கலைஞர்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பு வகித்து இந்திய அளவில் வியப்புடன் தமிழ்நாட்டை திரும்பிப் பார்க்கச் செய்யும் பல திட்டங்களையும், சட்டங்களையும்நிறைவேற்றியவர் நம் ஆருயிர் தலைவர் கலைஞர் அவர்கள் தான். ஏறத்தாழ 50ஆண்டுகாலம்கழகத்தலைவராகபொறுப்பேற்று இந்திய ஜனநாயக வரலாற்றில் சாதனை படைத்தவர். களம் கண்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றிப் பெற்று இந்திய அரசியலில் எவரும் செய்யாத தனிப் பெறும் சாதனை படைத்து, சட்டமன்ற பணியில் வைரவிழா கண்டவர்.

பத்திரிக்கை, சொற்பொழிவு, இலக்கியம், நாடகம் திரைப்படம், தொலைக்காட்சி என அவர் தொட்டத்துறையில்அனைத்திலும் சிகரமாக உயர்ந்து நின்றார். இத்தனை திறமைகளையும்ஒருங்கிணைத்த சிகஅவரது நிர்வாகத் திறமையால் தமிழ்நாடு வளமும்நலமும் பெற்றது.

இன்று இந்திய துணைக் கண்டமே வியந்து போற்றும் நம் “திராவிட மாடல் “ அரசின் திட்டங்களுக்கு அடித்தளம் அமைத்தவர், உழவர் துயர் தீர்க்க நிலச் சீர்திருத்த நில உரிமைச் சட்டம், இலவச மின்சாரம், கூட்டுறவு கடன் தள்ளுபடி, உழவர் சந்தை, ஒழுங்குமுறை விற்பனை கூடம், மகளிர் முன்னேற்றம் காண மகளிர் சுயஉதவிக் குழு, அரசு பணிகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, உள்ளாட்சி நிர்வாகத்தில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, நெசவாளர்களுக்கான பணி பாதுகாப்பு, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோரின் கோரிக்கை நிறைவேற்றம் போக்குவரத்தைநாட்டுடைமைஆக்கியது,

குடிசை மாற்று வாரியம், கை ரிக்க்ஷா ஒழிப்பு, கல்வி மருத்துவ கட்டமைப்பு, கிராமங்களுக்கும் சாலை போக்குவரத்து வசதி, புதிய தொழில் திட்டங்கள், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள், விடுகள்தோறும்வண்ணத் தொலைக்காட்சி பெட்டி, அடுப்புடன்இலவச எரிவாயு இணைப்பு, பட்டினி சாவு இல்லாத மாநிலம் ஆகும் வகையில் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி நவீன தமிழ் நாட்டை உருவாக்கிய ஒரு பெரும் சிற்பி, ஏழை, எளியவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மகளிர், நெசவாளர்கள், வணிகர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், இளைஞர்கள், திருநங்கைகள் எனஅனைத்துதரப்பினரின்நல்வாழ்வுக்காக”கண் துஞ்சாமல் தொடர்ந்து உழைத்த தூய தலைவர்” நம் தலைவர் கலைஞர் அவர்கள்.

தலைவர் கலைஞரின்நினைவைபோற்றும் வகையில் ஆகஸ்டு7ம் நாள் வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலையிலிருந்து அமைதி ஊர்வலம் புறப்பட்டு, பெரியார்மேம்பாலம் வழியாக அண்ணா பூங்கா அருகில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துமலர்தூவி அஞ்சலிசெலுத்தப்படுகிறது.கிய

மேலும் சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள சேலம் மாநகரத்தின் அனைத்து கோட்டங்களிலும் உள்ள அனைத்து தெருக்களிலும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவபடத்தை வைத்து மலர்மாலைஅணிவித்துமலரஞ்சலிசெலுத்திட வேண்டும் எனவும்.

இதைப் போலவே பேரூரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் மற்றும் ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிளைக்கழகங்கள் தோறும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை வைத்து அவரது நினைவைபோற்றும் வகையில் மரியாதை செலுத்திட வேண்டும் எனவும்.இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட கழக, மாநகரகழக நிர்வாகிகள் பொதுக்குழு செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றியகழக, பகுதி கழக, பேரூர் கழக நிர்வாகிகள், கழகமுன்னோடிகள், மாவட்ட கழக பிரதிநிதிகள், மாநகரகோட்டக்கழக செயலாளர்கள்,த்தி உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, அயலக அணி, சுற்றுச்சூழல் அணி, தொழிலாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி ஆகிய சார்பு அணிகள் உள்ளிட்ட அனைத்து அணிகளைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர்அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர் கலைஞர் அவர்கள் மீது பற்று கொண்ட பொதுமக்கள் என அனைவரும் பங்கேற்று சிறப்பித்திட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் ஏ.பெருமாள்சாமி தலைமையில் மாவட்ட கழகச் செயலாளர் என்.நல்லசிவம் கலந்து கொண்டு தேர்தல் களப்பணிகள் ஆற்றுவது, ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை, கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினார். கூட்டத்தில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து

# ஒவ்வொரு கட்சிகளாக வெளியேறுகின்றன!

### அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

திருச்சி, ஆக. 4-

திமுக கூட்டணியிலிருந்து சில கட்சிகள் வெளியேறும் என எதிர்கட்சிகள் கூறி வந்தன. ஆனால் தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து தான் ஒவ்வொருவராக வெளியேறி வருகிறார்கள். எங்கள் கூட்டணியிலிருந்து எந்த கட்சியும் விலகாது என திருச்சியில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டியளித்தார்.



தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக நலம் காக்கும் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் துவங்கி வைத்தார்.

தொடர்ந்து திருச்சி தில்லை நகர் கி.ஆ.பெ விஸ்வநாதன் பள்ளியில் நடைபெறும் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமை நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்தார்

தொடர்ந்து மருத்துவ முகாம்களை பார்வையிட்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்து பெட்டகம் உள்ளிட்ட பல்வேறு பயனாகிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த முகாமில் தொழில் நுட்ப மேம்பாட்டுடன் கூடிய நோய் கண்டறியும் வசதிகள் உள்ளது மேலும் பல்வேறு பரிசோதனை கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே என் நேரு,

இந்த முகாமை மக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

அதிமுக ஆட்சியில் ஒவ்வொரு திட்டத்திற்கும் “அம்மா” என பெயர் வைத்தார்கள். தற்போது நாங்கள் வைக்கும் திட்டத்திற்கு முதல்வர் பெயரை பயன்படுத்தக்கூடாது என வழக்கு தொடுத்து உள்ளார்கள். நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும் போது இது குறித்து நான் பேச விரும்பவில்லை.

திமுக கூட்டணியிலிருந்து சில கட்சிகள் வெளியேறும் என எதிர்கட்சிகள் கூறி வந்தன. ஆனால் தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து தான் ஒவ்வொருவராக வெளியேறி வருகிறார்கள். தற்போது ஓ.பி.எஸ் ம் வெளியேறி உள்ளார். எங்கள் கூட்டணியிலிருந்து கட்சிகள் வெளியேற வேண்டும் என ஆசைப்பட்டார்கள்

ஆனால் எங்கள் கூட்டணியிலிருந்து எந்த கட்சியும் விலகாது.

பல்வேறு விவகாரங்களில் இருந்து தப்பிப்பதற்காக தான் எடப்பாடி பழனிச்சாமி பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ளார்.

கிட்னி திருட்டு விவகாரத்தில் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் திருச்சி மாவட்ட ஆட்சியர் சரவணன்,மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் மதுபாலன், சட்டமன்ற உறுப்பினர்கள் பழனியாண்டி, கதிரவன்,சௌந்தர பாண்டியன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பிக்கட்டி பேரூராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

### கா.ராமச்சந்திரன் பங்கேற்றார்!

உதகை, ஆக.4-

பிக்கட்டி பேரூராட்சியில் நடை பெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு மனு கொடுத்தனர்.

தமிழ்நாட்டில் கடைகோடி மக்களுக்கும் அரசுத்துறைகளின் சேவைகள் மற்றும் திட்டங்கள் அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே சென்று வழங்கவும் பொதுமக்களின் மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் தீர்வு காணும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். இந்த அறிவிப்பின்படி தமிழ் நாட்டில் உள்ள அனைத்து நகர்புற மற்றும் ஊரகப்பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் துவக்கப் பட்டு மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக நேற்று குந்தா வட்டத்திற்குட்பட்ட பிக்கட்டி பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. பிக்கட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் நடந்த முகாமில் சாதி சான்று பட்டா மாற்றம் செய்தல்,ஆதார் பதிவு,முதியோர், கணவரால் கைவிடப்பட்டோர். மாற்றுத் திறனாளிகள் உதவி தொகை பெறுதல், மருத்துவ காப்பீடு அட்டை குடும்ப அட்டைகளில் முகவரி திருத்தம் செய்தல், மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்தல், மகளிர் உரிமைத்தொகை உள்ளிட்டவைகள் மனுக்களாக கொடுக்கப்பட்டது. த முகாமினை அரசின் தமிழ்நாடு தலைமை கொறடா ராமச்சந்திரன், மாவட்ட திமுக பொறுப்பாளர் ராஜு, மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் ஆகியோர் ஆய்வு செய்தனர். தொடர்ந்து பொதுமக்கள் அளிக்கும் மனுக்களை அரசுத்துறை அலுவலர்கள் பெற்று மனுக்களை பதிவு செய்வதுடன் இந்த மனுக்கள் மீது பரிசீலனை செய்து 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டும். பல்வேறு அரசுத்துறை கள் சார்பில் வைக்கப்பட் டுள்ள அரசு திட்டங்கள் றித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என அறிவுறுத்தினர். இதைத் தொடர்ந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மருத்துவ பரிசோதனை முறைகள் மற்றும் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் மனுக்கள் பதிவு செய்யப் படுவதையும் பார்வையிட்டு ஆய்வு நடத்தினார். இதில் பிக்கட்டி பேரூராட்சிகுட் பட்ட 15வார்டுகளை சேர்ந்த பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை கொடுத்தனர். இதில் குந்தா தாசில்தார் சுமதி, சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் கோமதி, பிக்கட்டி பேரூராட்சிசெயல் அலுவலர் மனோகரன், மற்றும் மாவட்ட திமுக அவை தலைவர் போஜன், ஊட்டி தெற்கு ஒன்றியம் (கிழக்கு) பொறுப்பாளர் பரமசிவன், தெற்கு ஒன்றியம் (மேற்கு) பொறுப்பாளர் ஜெகதீசன்,பிக்கட்டி பேரூராட்சி தலைவர் சந்திரலேகா, துணை தலைவர் ஜெயக்குமார், கீழ்குந்தாதியவாணி. மாவட்ட, ஒன்றிய, பேரூராட்சி தலைவர் சத்பேரூர் கழக திமுக நிர்வாகிகள், கீழ்குந்தா பேரூராட்சி அவை தலைவர் மாடக்கன்னு,தகவல் தொழில் நுட்ப பிரிவு மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் சண் முகன், சின்னான், சிவக்கு மார், சத்தியநாராயணன், சிவ ராமன், சந்தோஷ், ராமு.ராஜ சேகர், சத்தியநாதன் மற்றும் பிக்கட்டி பேரூராட்சிதுணை செயலாளர் விஜயலட்சுமி மற்றும் பிக்கட்டி, கீழ் குந்தா பேரூராட்சி கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம் மோகனூர் பேரூராட்சி அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஆகியோர் பார்வையிட்டு, மாற்றுத்திறனாளி ஒருவருக்கு உடனடியாக அடையாள அட்டை வழங்கினர். உடன் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் துர்காமூர்த்தி, நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் உட்பட பலர் உள்ளனர்.